

17

# ஆய்வுப்பொருள்: மூன்று:- இறை கட்டளைகள் வழி நீதியும் ஒழுக்கமும் நிறைந்த வாழ்வு

## 3.1. நம்மைப் படைத்துக் காப்பவரை என்றும் ஆராதிப்போம்





- இப்படங்களில் எமது கவனத்தைத் திருப்புவோம்.

இப்படத்தின் மூலம் உம்மில் ஏற்படும் உணர்வுகள் இரண்டை எழுதுக.

1.

2.



இலவச விநியோகத்திற்காக

மேலே தரப்பட்டுள்ள படங்களை நீர் முழுமையாக விளங்கிக் கொண்டிருப்பீர் என நினைக்கிறோம். இப்படைப்புகள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை. படைப்பைப் பாதுகாத்தல், விருத்தி செய்தல் ஆகியன கிறிஸ்தவர்களான நமக்கு வழங்கப்பட்ட பொறுப்பாகும். அதனை அழித்தல், அதன் வளர்ச்சிக்கு தீங்கு விளைவித்தல் போன்றன தீயசெயல்களாகும். ஆகையால், சூழலை விருத்தி செய்து பாதுகாத்தல் எமது கடமை.

- கிறிஸ்தவர் என்ற வகையில் எமது சூழலைப் பாதுகாக்க உம்மால் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் இரண்டு தருக.

1.

2.

இயற்கை,
இறைவனின் மகிமை வெளிப்படும் உன்னதமான இடம்.
இவை அனைத்தும் இறைதிட்டத்தின்படி செயற்படுகின்றன.
அவருடைய மகிமையும், ஞானமும்
எல்லா படைப்புக்களிலும் பிரதிபலிப்பதால்
அதில் ஒரு ஒழுங்கு முறையும், நல்லிணக்கமும் காணப்படுகின்றன.

இறைவன் தன்னால் படைக்கப்பட்ட அனைத்தையும்
ஆண்டு நடத்தும் அதிகாரத்தை,
தனது சாயலாகப் படைக்கப்பட்ட
அதி உன்னத படைப்பான மனிதனுக்கு அளித்தார்.
புதிய படைப்புகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளினூடாக,
படைப்பின் விருத்தியை முன்னெடுத்துச் செல்லும் பணியை
இறைவன் மனிதனிடம் ஒப்படைத்திருக்கின்றார்.
ஆகவே, படைக்கப்பட்ட எவற்றையும் நாம் வீணாக்குவது
இறைவனுக்கு எதிரானதாகும்.
ஆதலால், எங்களது அறிவையோ, படைப்பையோ
தான்தோன்றித்தனமாக பிழையான முறையில்
பயன்படுத்துவது
படைத்தவனையே அவமதிப்பதாகும்.

இறைவனை விசுவசித்து, அவரை எதிர்பார்த்திருங்கள். அவரை அன்பு செய்யுங்கள் என பத்துக் கட்டளையினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 2134

இறைவன் எப்போதும் மாறாதவர், என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர் என்பதால் அவரில் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைப்போம். உலகத்திலுள்ள தீயவைகள் ஏனைய படைப்புக்களை வழிபடுதல், சிலை வழிபாடு செய்தல் என்பனவற்றைத் தவிர்ப்போமாக.

**இறைவன்**
- விசுவசிக்கப்படுபவர்
- எதிர்பார்க்கப்படுபவர்
- நேசிக்கப்படுபவர்

எல்லாம் வல்லவர்
தமது வல்லமையினால் அகிலத்தைப் படைத்தார்.
படைப்பிலேயே மனிதன் அதி உன்னத இடத்தை வகிக்கின்றான்.
மனிதன் தன்னைப் படைத்தவரை அறிந்து கொள்ளவும் ஆராதனை செய்யவும்
இயல்பிலேயே அழைப்புப் பெற்றிருக்கிறான்.
படைத்தவரை மாத்திரமே வணங்கவும் ஆராதிக்கவும் அறிவுறுத்தப்படுகிறான்.
படைப்புப் பொருள்கள் எதுவும்
இறைவனுக்குரிய ஆராதனையையும் மகிமையையும் பெறலாகாது.
படைப்புகள் எவ்வளவுதான் மேன்மையுள்ளதாக, பெறுமதியுள்ளதாக இருப்பினும்
அவை அனைத்தும் இறைவனின் மகிமைக்காகவும்
மானிடரின் நன்மைக்காகவுமே படைக்கப்பட்டனவே ஒழிய
அவை எவ்விதத்திலும் இறைவனைவிட
முன்னிலைப்படுத்தப்பட முடியாத வெறும் படைப்புகளே.
இறைவனின் கைவண்ணங்களே.



இலவச விநியோகத்திற்காக


என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக் கொள்ளமாட்டேன்; என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்.

(வி.ப. *20:3-5*)

இறைவனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக சிலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். அவர்களையே நாம் புனிதர்கள் என்கின்றோம். எமது தேவைகளுக்காக இறைவனின் முன்னிலையில் நமக்காக அவர்களை பரிந்து பேசும்படி கேட்கிறோம். பயணம் செய்யும் திருச்சபை விண்ணுலக திருச்சபையினிடத்தில் அதன் செப உதவியை எதிர்பார்த்து நிற்கிறது. இறைவனுக்கு நெருக்கமான புனிதர்களும் எமது தேவைகளில் இறை இரக்கத்திற்காக செபிப்பார்கள் என்பது நமது நம்பிக்கை.

புனிதர்களுக்கு செலுத்தப்படும் வணக்கத்தை நாம் இறைவனுக்கு செலுத்தப்படும் ஆராதனையைப்போல் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆராதனையும் மகிமையும் இறைவனுக்குச் செலுத்தப்பட புனிதர்களுக்கோ வணக்கம் செலுத்தப்படுகிறது. எக்காரணத்திற்காவது புனிதர் வணக்கத்தை நாம் இறை ஆராதனையோடு சமப்படுத்தலாகாது. இரண்டிற்குமிடையிலுள்ள வேறுபாடுகளை தெளிவாக தெரிந்துகொண்டு எமது வழிபாடு ஆன்மீகத்தில் வளர வேண்டிய தேவை நமக்குண்டு.

**"எமது ஆராதனை, படைத்தவரும், அனைத்துக்கும் முதன்மையான முடிவில்லா அன்பின் இறைவனுக்கு மட்டுமே உரியது."**



உன் கடவுளாகிய ஆண்டவரை மட்டுமே
ஆராதிப்பாயாக - முதலாவது கட்டளை



இலவச விநியோகத்திற்காக

- ❒ பிற தெய்வங்களை வழிபடுதலும்.
- ❒ படைக்கப்பட்ட பொருளை விசுவாசித்தலும் அதை ஆராதித்தலும்.
- ❒ இறைவனிடத்தில் விசுவாசமின்மையும், விசுவசிக்க பின்வாங்கலும்.
- ❒ இறை நம்பிக்கையின்மையும் குருட்டு விசுவாசமும்.
- ❒ சோம்பலும் துன்மாதிரிகையும்.

இவை போன்றன முதலாம் கட்டளைக்கு எதிரான பாவங்களாகும்.

- சிலை வழிபாடு இறைவனுக்கு ஏற்புடைய செயல் அல்ல.

விடுதலைப் பயணம் 32:1-35 வாசித்து ஆசிரியருடன் கலந்துரையாடி மேற்குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி குறிப்பெடுத்துக் கொள்க.

> தாவீது எரி பலிகளையும், நல்லுறவுப் பலிகளையும் செலுத்திய பின்பு மக்களுக்கு ஆண்டவரின் பெயரால் ஆசி வழங்கினார்.
>
> (1குறி. 16:2)

இறைவன் மட்டுமே எங்கள் ஆராதனைக்கு தகுதியுடையவராக இருக்கிறார். ஆகையால் நாம்;

- ✪ இறைவனின் பெயரால் அவரை மகிமைப்படுத்தவும் அதே பெயரால் ஆசிகூறவும் மட்டுமே பயன்படுத்துவோம்.
- ✪ இறைவனின் மகத்துவமிக்க பெயரால் ஆணையிடாதிருப்போம்.
- ✪ நம் கடவுளாகிய ஆண்டவர் பெயரை பெருமதிப்புடன் பயன்படுத்துவோம்.
- ✪ நாம் வாழும் குடும்பம், பாடசாலை, சமூகத்தில் வாழ்வோரை விரும்பத்தகாத பெயர்களால் அழைத்தலை தவிர்ப்போம்.
- ✪ கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரான பெயர்களைத் தவிர்ப்போம்.

> கடவுளின் திருப்பெயரை வீணாக
> உச்சரியாதிருப்பாயாக - இரண்டாவது கட்டளை



இலவச விநியோகத்திற்காக

ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு.
(வி.ப. 20:8)

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலுள்ள மாறாத உடன்படிக்கையின் அடையாளமான ஓய்வு நாள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரயேல் மக்கள் மீட்கப்பட்ட நிகழ்வை ஞாபகப்படுத்துகிறது. பின்னர், கிறிஸ்துவின் உயிர்ப்பில் பாவ அடிமைத்தனத்திலிருந்து நாம் மீட்கப்பட்டு இறைவனின் உரிமையுள்ள பிள்ளைகளாக்கப்பட்டதை குறித்துக்காட்டும் நாளாக ஓய்வுநாள் உள்ளது. இறைவனுக்கு அன்பையும் ஆராதனையையும் மகிமையையும் செலுத்தும் மக்களாக நாம் ஓய்வு நாளைக் கொண்டாட வேண்டும். அத்தினத்தில் மிக சிறந்த வழிபாடாகிய திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. எனவே நாம் தகுந்த ஆயத்தத்துடனும் ஆர்வத்துடனும் இதில் பங்குகொள்ள கருத்தாயிருப்போம்.

- ஓய்வு நாளை அனுசரிப்பதன் மூலம் அன்று சிலுவையில் இயேசு செய்த தியாகத்தை புதுப்பிக்கின்றோம்.
- இறை உடன்படிக்கையில் பங்குகொள்கின்றோம்.
- ஞாயிற்றுக்கிழமை ஆண்டவரின் நாள்.
- இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த நாள்.
- இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறும் நாள்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி # 2174-2175


இலவச விநியோகத்திற்காக

**என் வாழ்க்கைக்கு...**

எனது முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு மனதோடும் இறைவனை அன்பு செய்வேன், ஆராதனை செய்வேன்.

**விடையளிப்போம்.**

1. ''இயற்கையின் படைப்பில் இறைவன் ஒரு நேர்த்தியான ஒழுங்கை கைக்கொண்டார்.'' இக்கூற்றை மூன்று உதாரணங்களுடன் விளக்குக.
2. இறைவனுடைய திருநாமத்தை வீணாகப் பாவிக்கும் ஒருவருக்கு நீர் வழங்கக்கூடிய அறிவுரை என்ன?
3. கத்தோலிக்க மாணவர் என்ற வகையில் ஓய்வு நாளை தூய்மையாகக் கடைப்பிடிப்பதற்கு நீர் எடுக்கும் வழிமுறைகள் மூன்று தருக.

## ஆண்டவரின் திருநாட்களை பரிசுத்தமாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு
(மூன்றாம் கற்பனை)

**ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் திருப்பலியில் முழுமையாகப் பங்கேற்பது கட்டாயமான கடமையாகும்**
**(திருச்சபையின் முதலாம் கட்டளை)**

**இலங்கைத் திருச்சபையின் கடன் திருநாட்கள்**

- ஆண்டின் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகள்
- தூய கன்னி மரியா - இறைவனின் தாய் (ஜனவரி 1)
- தூய கன்னி மரியாவின் விண்ணேற்பு (ஆகஸ்டு 15)
- தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் (டிசம்பர் 8)
- கிறிஸ்து பிறப்புப் பெருவிழா (டிசம்பர் 25)



இலவச விநியோகத்திற்காக